# வொட்சனின் உளவியல் சார் நடத்தைவாதம் உடல் உளப்பிரச்சினைக்கான தீர்வில் சடவாத பௌதீக அதீதத்தினை நோக்கி நகர்கிறது

**I.L.M. Mahir**
Department of Social Sciences,
South Eastern University of Srilanka
ilmmahir1971@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

உடல், உளம் என்பன ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. மெய்யியல் வரலாற்றில் உடல், உளம் தொடர்பான பிரச்சினை மிகவும் பிரதானமானதாகும். மிகத்தொன்மைக் காலம் முதல் இருந்தே இது தொடர்பான பிரச்சினைகள் விவாதத்திற் கொள்ளப்பட்டன. கடந்த நூறு ஆண்டுகளில் உளவியலில் ஏற்பட்ட வளர்ச்சியும், கடந்த ஐம்பது ஆண்டுகளில் நரம்பியலில் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும் இப்பிரச்சினையினைத் தீர்த்ததா என்ற நோக்கில் உளவியலாளரான J.B. வொட்சனின் நடத்தைவாத விளக்கம் வேறொரு நிலைப்பாடான சடநிலைப் பௌதீக அதீதத்தினை நோக்கி நகர்கிறது. இதனை மையமாகக் கொண்டே இவ்வாய்வு அமைகிறது.

***பிரதான சொற்பதங்கள்:*** *உடல், உளம், நடத்தைவாதம், சடநிலைப் பௌதீக அதீதம்*

## அறிமுகம்

மனிதனின் இயல்பு என்ன? அவன் பல்வேறுபட்ட சடங்களின் சேர்க்கையா? அல்லது அவசியமான சடத்துவ மூலங்களால் சுதந்திரமாக அவன் உருவாக்கப்பட்டுள்ளானா? என்ற வினாக்கள் உடல் உளம் தொடர்பாக பிரதானமாக எழும் பிரச்சனையாகும். தொன்மைக்கால மெய்யியலாளர்கள் முதல் தற்கால மெய்யியலாளர்கள் வரை இப்பிரச்சினை தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இதன் பேறாக பல்வேறு வகைப்பட்ட மாறுபட்ட கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இருப்பினும் இக்கோட்பாடுகள் அனைத்தும் உடல் உளம் தொடர்பான பிரச்சினையினைத் தீர்ப்பதாக அமையவில்லை.

உடல் உளம் என்பவைகளை விளக்குவதற்கான பல்வேறு சாத்தியமான வழிகள் காணப்படுகின்றன. சில கோட்பாடுகள் உடல் என்றால் என்ன,உளம் என்றால் என்ன, உடல் உளம் என்பவைகளுக்கிடையிலான வேறுபாடுகள் என்ன என்ற சில வினாக்களுடன் ஏலவே தொடர்புடையனவாக அமைந்திருக்கின்றன. இவை பௌதீக அதீதக் கோட்பாடுகளாகும். ஏனெனில் இக்கோட்பாடுகள் கடந்தநிலை உண்மையுடன் தொடர்புபட்டது. சடநிலைவாதம், கருத்தியல்வாதம், இருமைவாதம் என்பன உடல் உளப் பிரச்சனை தொடர்பாக மெய்யியல் ரீதியாக முன்வைக்கப்பட்ட பிரதானமான கோட்பாடுகளாகும். இக்கோட்பாடுகள் பல்வேறுபட்ட விளக்க அணுகுமுறைகள் உடல் உளம் தொடர்பாக முன்வைத்துள்ளது. இவைகளின் சாயலில் இருந்து உளவியல் ரீதியாக முன்வைக்கப்பட்ட விபரிப்புக் கோட்பாடு மனதின் இயல்புநிலை பற்றி விளக்க மனதின் அனுபவம் அல்லது அவதானம் என்பதனூடாக நடத்தையினை விளக்க முனைகிறது. இதன்படிஉளவியலாளர்கள் மனம் என்பதை நடத்தை என்பதனூடாக பகுப்பாய்வுக்கு உட்படுத்துகின்றனர்.

## ஆய்வுப்பிரச்சனை

உடல் உளப் பிரச்சனைக்கான தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட வொட்சனின் நடத்தை வாத விளக்கம் வேறொரு நிலைப்பாடான சடநிலைப் பௌதீக அதீதத்தினை நோக்கி நகர்கிறது.

**முறையியல்**

இவ்வாய்வு முறையியலாக பண்பு ரீதியான ஆய்வு முறையில் பகுப்பாய்வு முறையினூடாக விபரிப்பு முறை கைக்கொள்ளப்படுகின்றது.

**பகுப்பாய்வுகளும் முடிவுகளும்**

நடத்தைவாதக் கோட்பாடானது பொருள்முதல்வாதத்திற்கு இணையான ஓர் உளவியல் சார்ந்த பகுப்பாய்வு முறையாகும். விபரிப்பு நடத்தைவாத முறையானது மெய்யியல் சார் கோட்பாடுகளை அடியொட்டியதாக அமையாது, அவதானம், பரிசோதனை மூலமாக மனத் தோற்றப்பாட்டுப் பிரச்சினையினைத் தீர்க்கும் முறையாகும். மனசெயல் முறை தொடர்பான நடத்தைவாதக் கோட்பாட்டின் தோற்றுவிப்பாளரான John Broadus Wattson உளவியலினுடைய விடயப்பொருளாக மனித நடத்தையினை எடுத்துக்காட்டியிருந்தார். வொட்சன் மனச் செயற்பாடு அவதானிக்க முடியாதது, புலப்பாடாதது என்ற உள்ளார்ந்த மனச்செயற்பாடுகளை மறுதலித்து நடத்தை தோற்றப்பாடுகளினூடாக மனம் என்பதை விளக்கினார்.

வொட்சன் உளவியலை ஒரு விஞ்ஞானமாக விருத்தி செய்திருந்தார். உள்ளார்ந்த அனுபவங்களான புலக்காட்சி, உணர்வுகள், கற்பனை, மனவெழுச்சி, சிந்தனை ஆகியன அகவயமான உளவியல் சொற்பிரயோகங்களாக இவர் எடுத்துக்காட்டி இவற்றை கைவிட்டு புறவயமுறைகளை மட்டும் ஏற்றுக்கொண்டிருந்தார். உயிரிகளின் சிலவகை செயற்பாடு அல்லது இயக்கங்கள் தனிப்பட்ட நனவுகளாகும். நடத்தைகளின் அவதானம் அவசியமான தரவுகளை வழங்குவதனால் நடத்தைகளின் அவதானம் விஞ்ஞான உளவியலாகும். உடற்கூற்றியல் ஆராய்ச்சியின் ஊடாக பௌதீக விடயங்களை உளவியலால் குறைக்க முடியும் என இவர் நம்பியிருந்தார். வொட்சனின் இம்முறை ரஷ்ய உளவியலாளரான Ivan Pavlov வின் பரிசோதனை ஆராய்ச்சியினை தெளிவாக்குகின்றது.

மனித நடத்தை அவதானிக்கப்படக்கூடியது இதன்பிரகாரம் மனித இருப்பு என்ன செய்கிறது பற்றி அறிந்து கொள்ளாலாம். மனம் தொடர்பான அகவயமான கருத்துக்கள் எதுவும் இல்லை. அனைத்தும் புறவயமானதாகும். இதனை விளக்க அவர் தூண்டல் துலங்கல் (Stimulation and Response) கொள்கையினை பிரயோகிக்கின்றார். தூண்டல் என்பது ஒரு சூழ்நிலையில் ஒரு உயிரியின் திசுக்களில் (Tissues) தாக்கங்கள் ஏற்படுத்துவது என்றும் அந்த உயிரி தாக்கத்தின் பிரகாரம் எதிர்தாக்கமாக அமைவது துலங்கல் என்றும் எடுத்துக்காட்டினார். இத்தகைய செயற்பாடு தினந் தோறும் எமது வாழ்வில் நடந்துகொண்டிருக்கும் ஒன்றாகும்.

மேலும் வொட்சனின் கருத்தின்படி நாங்களாகவே உணரும் சிந்தனை என்பது அகவயமான விடயமல்ல இது புறவயமான விடயமாகும். வெளிப்படையான பேச்சுக்களை தசைகளின் பழக்கங்களினூடாகவே கற்றுக்கொள்கின்றோம். இதற்கு உள்ளார்ந்த பேச்சுக்களே காரணம் என்றார். ஆகவே எமது வெளிப்படையான பேச்சுக்கள் பழக்கப்படுத்தப்பட்டதனால் நாம் தொடர்ச்சியாகப் பேசுகின்றோம். இவ்வடிப்படையில் புறவயமான விடயங்களை மட்டும் ஏற்றுக்கொள்வது தொடர்பாக இவர் பல்வேறுபட்ட நியாயிப்புக்களை செய்திருந்தார்.

**முடிவுரை**

வொட்சன் முன்வைத்த நடத்தைவாத அணுகுமுறையானது உடல் உளப் பிரச்சினை தொடர்பாக பிரச்சினையினைத் தீர்க்கவல்லதாக அமையவில்லை அதாவது தூண்டல் துலங்கல் அடிப்படையில்பௌதீகத் துலங்கலிற்கும் மனத்துலங்கல்களிற்குமிடையிலான பாரிய வேறுபாட்டினை நாம் உணருவதில்லை. வெளிநிலையான துலங்கல்களை எந்தப் பிரச்சனைகளுமின்றி உணருகின்றோம் ஆனால் உள்ளார்ந்த விடயங்களை அவதானிப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன அவை எங்களது கண்களிலிருந்து மறைந்தவைகளாகும். ஆகவே உள்ளார்ந்த துலங்கல்களை சரி அல்லது பிழை என விவாதிப்பதில் நாம் அனுமானத்திலேயே தங்கியிருக்கிறோம். இதனால் அகவயமான விடயங்களை புறவமாக மாற்றினார் என்ற விடயத்தில் இவர் சடநிலை வாதத்தினைச் சார்ந்திருக்கிறார். சடநிலைவாதக் கருதுகோளின் படி உடலின் உடற்கூற்றியல் செயற்பாட்டினைத் தவிர மனம் என்ற ஒன்று இல்லை என்பதாகும். இதில் கூறப்படும் விடயம் எதுவெனில் மனஅனுபவம் என்பதில் ஒன்றுமில்லை பௌதிக செயற்பாடு மட்டுமே விடயமாகும். நாம் அவதானத்தில் தங்கியிருந்தால் மனசெயற்பாடு என்பதை மறுக்க முடியாது. அதேபோன்று சுயமாக அவற்றை உணர்ந்தால் அனுபவ உண்மைகளை மறுக்க முடியாது. இதன்படி நோக்ககின்ற போது வொட்சன் அறிமுகப்படுத்தும் மனதோற்றப்பாட்டுக் கோட்பாடு நிராகரிப்பானது ஒருவகையில் மனதில் ஏற்படும் அனுபவம், அனுமானம் என்பவைகளை ஏதோ ஒருவகையில் ஏற்றுக்கொள்கின்றது. அப்படியாயின் சடவாத நிலைப்பாட்டிலிருந்த வொட்சன் மீண்டும் சடவாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பௌதீகஅதீக நிலைப்பாட்டினை நோக்கி நகர்வதாகக் கருதுவதற்கு இடமுண்டு. முடிவாக சடநிலைப் பௌதீக அதீத விளக்கமாக இதனை அடையாளப்படுத்தலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. Armstrong ,D.m (1968) A materialist Theory of the Mind , London , Routledge and Kegan Paul ,New York, Humanities Press.
2. Hergenhahn. B.R (2009) An Introduction to the history of Psychology ($6^{th}$ ed) Belmont. CA, Nadswoerth.
3. John Broadus Watson. (1927), Behaviourism Kegan Paul, Trench, Trubner and Co Ltd. London.

## Article

1. Armstrong. D.M. “Introspective Knowledge”, Philosophical review 1963